தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பசுமை விழிப்புணர்வு மாரத்தான்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இன்று (23-08-15) வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுனத்தின் சார்பாக பசுமை மாரத்தான் போட்டி நடைபெற்றது. வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆரய்ச்சி நிறுவனத்தின் ஆற்றல் மற்றும் சூழல்துறையைச் சார்ந்த மாணவர்களால் விழிப்புணர்வு மாரத்தான் நடத்தப்பட்டது. ஆற்றல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்பதனைக் கருப் பொருளாகக் கொண்டு நடைபெற்ற இந்த மாரத்தான் போட்டியானது, ஒன்பதாவது தேசிய அளவிலான மாநாட்டின் ஒரு முன்னோட்ட நிகழ்வாகும்.

இவ்விழாவில் கோவை மாநகராட்சியின் காவல்துறை உதவி ஆணையர் திரு. சுரேஷ்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. இராமசாமி அவர்கள் கொடியசைத்து இந்நெடு நீள ஓட்டப் போட்டியினைத் துவக்கி வைத்தார்.

இப்போட்டியானது இளையோர் ஆண்கள், பெண்கள் மற்றும் மூத்தோர் ஆண்கள், பெண்கள் என நான்கு பிரிவுகளில் நடைபெற்றது. இளையோர் ஆண்களுக்கான பிரிவில் 7 கி.மீ., பெண்களுக்கு 5 கி.மீ., என்றும் மூத்தோர் ஆண்களுக்கான பிரிவில் 9 கி.மீ., பெண்களுக்கு 7 கி.மீ., என்றும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

போட்டியில் 2500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கோவை மாநகரில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள் என பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மேலும், 84 வயதடைந்த தேவராஜ் என்ற முதியவர் ஒருவர் பசுமை சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை பொதுமக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் வகையில் மாரத்தானில் கலந்து கொண்டு ஓடியது அனைவருக்கும் வியப்பாகவும், போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு உற்சாகம் அளிப்பதாகவும் இருந்தது.

இளையோர் ஆண்களுக்கான பிரிவில் மதுக்கரை அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மகேஷ்குமார் 30 நிமிடம் 44 வினாடிகளில் இலக்கை அடைந்து முதலிடத்தைப் பெற்றார். அவரைத் தொடர்ந்து மணிவாசகம், சந்தோஷ்குமார் ஆகியோர் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர்.

இளையோர் பெண்கள் பிரிவில் சி.எம்.எஸ். மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த சம்யாஸ்ரீ என்ற மாணவி 18 நிமிடம் 29 விநாடிகளில் இலக்கை அடைந்து முதலிடத்தையும், சிநேகா மற்றும் மெகதாஜ் பேகம் ஆகியோர் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

மூத்தோர் ஆண்களுக்கான பிரிவில் காருண்யா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் விக்டர் சாமுவேல் ராஜன் 31 நிமிடம் 40 விநாடிகளில் இலக்கை அடைந்து முதல் இடத்தைப் பிடித்தார். கார்த்தி மற்றும் மனோ ஆகியோர் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர்.

மூத்தோர் பெண்களுக்கான பிரிவில் என்.ஜி.பி. கல்லூரி மாணவி அனுபிரியா 33 நிமிடங்களில் இலக்கை அடைந்து முதல் இடத்தைப் பெற்றார். கிருத்திகா மற்றும்

சோனியா என்ற மாணவிகள் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர்.

வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ரூ.50,000க்கான ஊக்கத்தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை கோவை மாநகராட்சியின் காவல்துறை உதவி ஆணையர் திரு. சுரேஷ்குமார் அவர்கள் வழங்கினார். போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

பசுமை வளர்ச்சியையும் சுற்றுப்புறத்தையும் பேணிக்காக்கும் விதமாக போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மலைவேம்பு மற்றும் பலாமரம் உள்ளிட்ட 500 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

விழாவில் வேளாண் பொறியியல் முதன்மையர் முனைவர். திவாகர் துரைராஜ், வேளாண் முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டு விழா ஏற்பாடு செய்த பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

விழா நிறைவாக வேளாண் பொறியியல் கல்லூரி 4வது ஆண்டு மாணவர் முத்து வீரன் அவர்களும் மாணவி மது பிரியா அவர்களும் விழா நன்றியுரை வழங்கினர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்